


# ஆகஸ்ட் 29
# புனித ஸ்நாபக அருளப்பர் தலை வெட்டுண்டது

இவர் இறைவனது ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து தன் வாழ்வின் பெரும் பகுதியைக் காட்டில் செலவழித்தார். பின்னர் காடுகளில் வாழ்ந்திருந்த தபோதனர்களுக்க மேல்வரிச்சட்டமும் முன்னோடிமானார். இவருக்கு வயது முப்பது தூண்டிப் பிரசங்கித்தார். இவர் கிறிஸ்துநாதரின் முன்னோடி. கிறிஸ்துவுக்கு ஞானதீட்சை அளிக்கும் பெறுபெற்றவர். 'இவரே இறைவனின் செம்மறி' என மக்களுக்குச் சுட்டிக் காட்டியவர்.

மாசில்லா குழந்தைகளை கொன்ற ஏரோது மன்னன் இறந்து போனான். அவனுடைய மகனான ஏரோது அந்திபாஸ் நாட்டை ஆண்டு வந்தான். இவனையே நம் ஆண்டவர் நரி என்று அழைத்தார். இவன் ஒருமுறை உரோமைக்குச் சென்று, அங்கு தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியான ஏரோதியாளைச் சந்தித்து அவளைத் தன் மனைவி ஆக்கிக் கொண்டான். இவனுடைய நியாயமான மனைவியோ அரேபியா நாட்டின் அரசனான அரெத்தாஸ் என்பவரின் மகள். அவள் தன் தந்தையிடம் போய் அடைக்கலம் புகுந்தாள். நடந்த சண்டையில் ஏரோதின் இராணுவம் முறயடிக்கப்பட்டது. விபச்சாரியான ஏரோது அந்திப்பாஸை அருளப்பர் அச்சமின்றி கண்டித்தார். அதன் விளைவாக சிறையில் அடைக்கப்பட்டார். நம் ஆண்டவர் இறக்க ஓர் ஆண்டிற்கு முன்னால் ஏரோதியாளின் வேண்டுகோளின்படி தலையை வெட்டி அருளப்பர் கொல்லப்பட்டார்.

**சிந்தனை:** பெற்றோர்களும், ஆசிரியர்களும் தங்கைச் சார்ந்தவர்கள் தவறு செய்யும் போது அச்சமின்றி அவர்களைக் கண்டிக்க வேண்டும்.

**செபம்:** ஆண்டவரே, திருச்சபைக்கும், நாட்டிற்கும் ஏற்ற தலைவர்களைத் தாரும்.